Registered No. M. 2330 'SIDDHANTHAM'
Vol. 29—No. 2

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | மன்மத மாசி 1956 பிப்ரவரி | இதழ் 2

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்
192, லாயிட் ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

சிதம்பரம் பொன் விழாவில்
நிறைவேறிய தீர்மானங்கள்

1. சைவ சித்தாந்த மகா சமாஜ உறுப்பினரும், சித்தாந்தப் பேராசிரியரும் ஆன ஓவியமணி திரு. வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்கள் இறைவன் திருவடி நீழல் அடைந்தமைக்குச் சமாஜம் மிகவும் வருந்துகின்றது. அன்னார் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றது.

2. ஒவ்வொரு நகரத்திற்கும் சிறு கிராமத்திற்கும், ஐந்து முதல் பதினைந்து பேர் வரை கொண்ட சைவ சித்தாந்தக் கமிட்டிகளை, ஜில்லா ஆலோசக கமிட்டி நியமிக்க வேண்டும் என்றும், மேற்கண்ட கமிட்டிகள் சென்னை இராஜ்யம் முழுவதும் இதுபோன்று ஓர் ஆண்டுக்குள் நியமித்த பிறகு, எல்லாச் சங்கங்களையும் தலைமைச் சமாஜம் ஏற்று ஆக்கவேலையில் ஈடுபடும் ஒரு மாநாடு கூட்டி ஆவன செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. திருநெறி விளம்பல் வேலைக்காக விளம்பலர்களை அமர்த்தி நாட்டின் பல பகுதிகளிலும் அருள் திருநெறியை மக்களிடையே பரப்புவதற்குக் கோயில்கள் பொருளுதவி செய்வதற்கும், தக்க ஆட்களை அமர்த்துவதற்கும் அரசினர் அறநிலையத் துறையார் வேண்டிய ஒப்புறுதிகளை அளிக்க வேண்டும் என்று இந்தக் கூட்டம் வேண்டிக் கொள்ளுகின்றது. இதுகுறித்து அரசினரிடம் சென்று பேசி, இவ் வேண்டுகோளை வற்புறுத்த இந்தக் கூட்டத்தின் தூதுக் குழு ஒன்று செல்வது என்றும் முடிவு செய்கின்றது.

அறிக்கைகள்

1. கடந்த ஐம்பது (50) ஆண்டுகளாகத் தமிழுக்கும் சமயத்திற்கும் அரும்பெருந் தொண்டுகள் ஆற்றியுள்ள நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தினை, இனியும் மேன்மேற் சிறப்புற வளர்த்தல் சமயமும் தமிழும் போற்றும் தக்கவர்கள் அனைவருக்கும் இன்றியமையாத தலையாய பெருங் கடமையாக இருக்கின்றது. ஆதலின், அன்பர்கள் பலரும் ரூபாய் மூன்று செலுத்திச் சமாஜத்தின் உறுப்பினராக

Regd M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாரியையுள் நாடு

மலர் 29	மன்மத மாசி 1956 பிப்ரவரி	இதழ் 2

காலநிலை

ஆசிரியர்

நமது நாடு, நமது சமயம், ஆ, இந்தச் சொற்களைக் கூறும்போதே என்ன மகிழ்ச்சி, என்ன பெருமை அடைகிறோம். நமக்கு மிகவும் பற்று உண்டு என்றும் கூற ஆசைப்படுகிறோம். ஆனால் செயல்முறையில் என்ன காட்டுகிறோம். அதனைச் சிந்திக்கும்போதுதான் வருகிறது துக்கம்—நமது நாடும் சமயமும் படுகிற அல்லோல கல்லோலங்களை நினைக்கும்போது எல்லாம், நம்முடைய ஆற்றலில்லாத் தன்மையைக்கண்டு நம்மை நாமே வெறுக்கும் நிலைமைக்கு வருகிறோம்.

வெள்ளையர்கள் ஆட்சியில் நாம் அடிமைப்பட்டுக்கிடந்த நாளில் ஒருவிதக் காவல் நமக்கு இருந்தது. நமது நாட்டையும் சமயத்தையும் காக்கவேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள்; செய்யவும் செய்தார்கள். சமய மாற்றங்களும் குறைவாகவே இருந்தன. தன்னுரிமை நமக்கு வந்துவிட்டால் நமக்கு இந்திர போகம் கிடைத்துவிடும் என்று எண்ணினோம். வந்த பிறகு என்ன காண்கிறோம். விருப்பப்படி நாட்டைக் காக்கவும், சமயத்தைக் காக்கவும் முடியாதவர்களாக இருக்கிறோம். ஐயோ, கையிலாகாத் தன்மை நம்மைக் கெடுக்கிறது அல்லவா? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

நாட்டுச் சீர்கேட்டைப்பற்றி நாம் ஏன் இங்கு எழுத வேண்டும்? ஆனல் சமயச் சீர்கேட்டைப்பற்றி எழுத வேண்டாமா? அதனை ஒரு சிறிது எழுதுவோம்.

சட்டப்படி நமது அரசியல் சமயத் தொடர்பு இல்லாதது. சமயத்தைக் குறித்து யார் வேண்டும் என்ருலும் என்ன வேண்டும் என்ருலும் செய்யலாம். அதில் அரசியலார் யாதும் சொல்லமாட்டார்களாம். அண்மையிலே அநீதியான மதமாற்றங்களைத் தடுக்கவேண்டும் என்று பாராளுமன்றத்தில் ஒருவர் பேசியபோது, முதலமைச்சர் அதை நாம் செய்யக்கூடாது என்று கூறிவிட்டார். இதன் விளைவாக வெள்ளையர் ஆட்சியில் இருந்ததைக் காட்டிலும் மிகவும் கொடிய வழிகளில் நமது மக்கள் கொண்டுபோகப் படுகிருர்கள். நாம் கோழைகளாக அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்ருேம்.

இவ்வாறு மத்திய அரசியலில் இருக்க, நமது தமிழ் நாட்டில் நாம் எந்த நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிருேம் என்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். நமது சமயத்து எல்லா ஆலயங்களும் அரசியலார் அதிகாரத்துக்குள் அடங்கி இருக்கின்றன. கோயில் பணங்கள் நூருயிரக்கணக்கில் அரசியலில் முடங்கிக் கிடக்கின்றன. கோயில் பரிபாலனத்திற்கோ, பழுது பார்ப்பதற்கோ அவைகள் பயன்படுகிறதில்லை. இந்த நிலைமை எவ்வாறு சமயச் சார்பற்ற அரசியலில் செய்யப்படுகிறதோ அறியோம். நமது கோயில் பணங்கள் மட்டும் இவ்வாறு முடங்கிக்கிடக்க, பிற மதத்தார்களின் கோயில் பணங்கள் இவ்வாறு ஏன் எடுத்துக் கொள்ளப்படவில்லை? இதனை யார் கேட்கிருர்கள். கேட்டாலும் எவர் பதில் சொல்லுகிருர்கள். தூங்கினவன் தொடையில் கயிறு திரித்த கதைபோல் நமது நாட்டுக் கதை இருக்கிறதல்லவா?

ஆலயங்கள் கிடக்கட்டும். நமது அருமைக் குழந்தைகள் என்ன ஆகிருர்கள்? அரசியல் பள்ளிகளில் சமய போதனை இல்லை. நமது வீடுகளிலும் இல்லை. நமது பெரியோர்களோ செல்வத்தை வைத்துக் கொண்டும் சமய பாடங்களைப்

போதிப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்வதில்லை. விதியின்றி நமது குழந்தைகளைப் பிற சமயப் பள்ளிகளுக்கு அனுப்புகிறோம். இளமையிலேயே பிற சமய போதனை வற்புறுத்தப்படுவதால் இளகிய நெஞ்சுகள் மாறிவிடுகின்றன. அக்குழந்தைகள் பெரியவர்கள் ஆன பிறகு நமது சமய போதனைகளை அறிந்துகொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள். நம்பிக்கையோ பிற சமய போதனைகளில் புகுந்து விடுகின்றது. ஆகவே, பிற மதங்களுக்கு அனுதாபமும், தவறினால் கடவுள் இல்லை என்ற எண்ணமுமே முதிருகின்றன. இவைகளுக்கு எல்லாம் நாமே காரணம் அல்லவா ?

இவ்வாறு சமய போதனையிலிருந்து விலக்கப்படுகின்றவர்கள் ஏழை மக்கள் மட்டுமா? பணக்காரர் பிள்ளைகளுமே என்றால் அது வியப்பே அல்ல—தற்காலத்திய பணக்காரர்கள் தமது குழந்தைகளைப் பொதுப்பள்ளிகளுக்கு அனுப்பினால் தகுந்த பயிற்சி கிடைப்பதில்லை என்று எண்ணிக் கான்வெண்டுகளுக்கு (Convent) அதிக பணம் செலவழித்தும் அனுப்புகிறார்கள். அங்கே பிற சமய போதனையே வற்புறுத்தப்படுகிறது. இளவயதில் இந்தப் போதனை பெறுகிற பணக்கார இளைஞர்கள் பின்னால் என்ன கதியடைகிறார்கள் ஆராயுங்கள். சில பள்ளிகளில் சிறுமிகளை மயக்கித் தங்கள் சமயங்களில் சேர்த்துக்கொண்ட விபரீதங்களையும் காண்கின்றோம். தப்பிப் பெருகும் மக்களோ நமது சமய உண்மைகளில் நம்பிக்கை அற்றுத் தன் மதிப்பு வீரர்களாகத் திகழத் தொடங்குகிறார்கள். இம்முறை சரியா ?

நமது பயங்காளித் தன்மையைப் பிற சமயத்தார்கள் அறிவார்கள். அவர்கள் மண், பெண், பொன் இம் மூவகை மாயப் பொருள்களாலும் நமது மக்களை மயக்கித் தம் சமயங்களில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். எண்ணிக்கையில் சிறப்பு என்ற கொள்கைகளை முன்னிட்டு ஏனையோர்கள் செய்யும் செய்கை சரியோ அல்லவோ அது ஒருபுறம் இருக்க, நமதுநாட்டு மக்கள் உண்மைகளை அறியாது நரகங்களில் வீழ்ந்து அழிகிறார்களே என்ற

என்னம் நம்மை வருத்துவதில்லையா? தமது மனதாரப் பிறருடைய கொள்கைகளில் உண்மை உண்டு என்று நம்பிப்போகிற மக்களைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய தில்லை. அறியாத வயதிலே நமது சமயத்தைத் தெரிந்து கொள்ள வகையின்றிப் பிற மதங்களில் வீழ்தல் மிகக் கொடுமை அல்லவா? இந்த மதமாற்றங்களைக் கண்கூடாகப் பார்த்துக்கொண்டு யாதும் செய்யாது கண்களை மூடிக் கொண்டு இருக்கின்றோம்.

வெள்ளைக்காரர்கள் தொடக்கத்தில் வந்தபோது நமது சமயக் கொள்கைகளைப் பற்றி நிந்தித்து எழுதிக்கொண் டிருந்தார்கள். பின்னல் நமது சமயச் சிறப்பை அறிந்த பிறகு அவ்வாறு எழுதுவதை நிறுத்திக் கொண்டார்கள். சில வெள்ளையர்கள் நமது சமய மேன்மைகளைப் புகழவும் தொடங்கினர்கள். நமது திருமுறைகளிலும் மெய்கண்ட நூல்களிலும் உள்ள உண்மைகளை அறிந்து அவைகளை மொழிபெயர்த்து வெளியிடவும் தொடங்கினர்கள். இந்த நல்ல நிலைமை தற்போது மறைந்துவிட்டது. நமது நாட்டு மக்களே விவிலியம் புகுந்து நமது சமயக் கொள்கைகளை வெறுத்து அவைகளை இகழத் தொடங்குகிறார்கள். சலிப் பின்றி மேடைகளில் பேசுவதும் தெருக்களில் பாடுவதும் ஆக இருக்கிறார்கள். தற்போதோ தன்மானக் கிளர்ச்சியை முன்னிட்டு நமது கொள்கைகளையும் பண்டைய நூல்களையும் நிந்தனை செய்து வெளிப்படுத்துகிறார்கள். இவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டு நாம் வாளா இருக்கின்றோம். நமது கடமை என்ன?

இனி நமது குழந்தைகள் நம்மைவிட்டுப் போய் விடாமல் பாதுகாக்கவேண்டும் என்றால் 'எனக்கு நற்கதி கிடைத்தால் போதும்' என்று மூலையில் அமர்ந்து பூசை மட்டும் செய்துகொண்டு இருக்காமல் ஆக்க வேலைகளில் புகவேண்டும். சமயப் பள்ளிகள், கோயில்களில் சமய போதனை, சபைகளில் சமய போதனை, வார வழிபாடுகள், சமயத் தேர்வுகள், பரிசுகள், சேவா சங்கங்கள், பஞ்ச நிவாரணங்கள், அனதை விடுதிகள், ஏழைகளுக்குச் சமய

விடுதிகள், மருத்துவச் சாலைகள், சிறைகளில் சமய போதனை, நோயாளிகளுக்குச் சமய போதனை, மலைவாழ்நர்களுக்குச் சமய உதவி, கன்னியர்கள் விடுதி, விதவைகள் விடுதி, செய்தித் தாள்கள், உருவப் பிரசுரங்கள், ஞானப் பாடல்கள் ஒலிபரப்பு முதலான பலவகைகளை ஏற்படுத்திச் சமயப் பரப்பினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த வகை அறச் செயல்களில் மக்கள் ஈடுபடுவார்களாக!

"இனி, யார் அனையர் ஆவார்?"

புலவர் - முருகவேள், B. O. L.

அன்புமிகு பெருந்தகையோய்! அரியபெரும்
புலமையினோய்! ஆன்ற சான்றோய்!
மன்பெருஞ்சீர்த் தோன்றலுயர் மறைமலையார்
மாணவர்தம் மரபிற் போந்தோய்!
பண்புயர்பா ரிப்பாக்கம் கண்ணப்ப
முதலியார் எனப்ப கர்ந்து,
நன்றுமிக யாம்உவக்கும் நல்லோய்! நீ
எமைப்பிரிந்தென் நலங்கு வித்தாய்? 1

காவியங்கள் கற்றுவல்லோய்! கவிதைபல
செய்தநல்லோய்! கட்டு ரைகள்,
ஓவியங்கள் பற்பலதாம் உயர்ந்தனவாய்
வரைந்தளித்தோய்! ஒப்பில் தேர்ச்சி
மேவி,எங்கும் சித்தாந்த மெய்ந்நெறியை
விளங்கவைக்க மிகமு யன்றோய்!
பாவியெங்கள் தீவினையாற் பண்புடையோய்!
நீமறைந்தாய்! பற்றற் றேமால்! 2

இனிமைமிகத் தமிழ்ச்சைவ இளைஞர்கள்பாற்
பேசிமிக இன்பம் செய்வாய்!
நனிபெரிதும் அவர்வினவும் நல்லபல
ஐயங்கள் நலக்கத் தீர்ப்பாய்!

நினையளவும் அவர்தம்மைச் சிறுவரெனக்
கருதாமற் சிறப்ப ளிப்பாய்!
அனையனையாய்! அருளுடையாய்! ஐயா! நீ
எமைப்பிரிந்தாய்! அந்தோ! அந்தோ! 3

எத்துணையோ திருமணங்கள் இனியதமிழ்
முறைக்கேற்ப இயற்றி வைத்த
வித்தகனே! மறைமலையார் விளக்கியநற்
கொள்கைகளே வியந்து போற்றும்
செத்தமிழ்க்கோய்! மணியரசர், திரு. வி. க.,
சிவமுத்து சிறந்த நண்ப!
மெய்த்துணையாய் எமக்கெல்லாம் விளங்கிநின்றாய்!
எங்ககன்று மேவி நின்றாய்? 4

தொகையாலும் வகையாலும் சொலமேற்கொள்
பொருள்விரித்துத் துலங்கு தற்கா
நகையோடு பொருள்செறிந்த நல்லுவமை
நல்மேற்கோள் நயமும் காட்டித்
தகையாய வழக்கோடு சாத்திரத்தின்
நுணுக்கங்கள் தகவிற் சாற்றித்
திகையாவும் புகழ்பொறித்த சித்தாந்தப்
பெரும்புலவ! எவண்நீ சென்றாய்? 5

காசறுபா ரிப்பாக்கம் கண்ணப்ப
முதலியார் எனவே கற்றோர்
பேசுமுயர் பெருந்தகைநீ! பிறங்குசென்னைச்
சிவனடியார் பெருங்கூட் டத்தில்
ஆசிரியர் இளவழக ஞர்வகுப்பைத்
தொடக்கிவைத்தே அருமை ஓங்கத்
தேசுமிகு சிவஞான சித்தியார்
சிறப்புரைத்த சிறப்பென் சொல்கேம்? 6

பாவலர்கள் புகழ்பாரிப் பாக்கம்சீர்க்
கண்ணப்ப! பரந்த கல்வி
நாவலர்வேங் கடசாமி நாட்டார்தாம்,
நினதினிய நடையைப் போற்றி

மேவியொளிர் இலக்கணநல் விளக்கமறுப்
புரைப்போரில், வியந்து, " நண்பர்
தேவலர்செந் தமிழிலெமைச் சினந்ததும்எம்
பேறெ"ன்றார்! செப்பல் என்னோ? 7

பெருக்கமிகு புலமையினாற் பெருமிதமே
கொளத்தகுந்த பெற்றி மிக்கோய்!
திருக்குறளை இந்நாளிற் சிலர்புகழத்
தொடங்கியுள்ள திறந்தான், முன்னாள்
அருத்திமிக மறைமலைநம் அடிகளார்
தலைமையினில் ஐய! நீதான்
திருத்தமிகக் கொண்டாடும் திருவள்ளு
வனார்திருநாட் சிறப்பா லன்றோ? 8

காணிக்கை விரும்பாமற் கல்விநலன்
பலர்க்களித்துக் களித்த நல்லோய்!
மாணிக்க வாசகர்தம் வளங்கொள்திரு
வெம்பாவை மற்றுண் டாள்நூல்
பேணிக்கற் றியற்றியதாய்ப் பேசுவர்தம்
பிழையுரையைப் பெரிதும் ஆராய்ந்
தாணித்த ரமாய்மறுத்தாய்! ஐய!நின
தாய்வுநலன் அளக்கற் பாற்றோ? 9

காட்சியினுக் கெளிவருவாய்! கனிவுமிக
இனியசொல்வாய்! கலைஞர் ஏறே!
மாட்சிமிகு கண்ணப்ப மாமணியே!
காண்தோறும் மனம கிழ்ந்து,
நீட்சிமிகத் தமிழருமை, நிகரில்சிவ
நெறியருமை, நெஞ்சம் ஒன்றி
ஆட்சிமிகப் பலவகையால் அறிவுறுப்பாய்!
எமக்கினியார் அனையர் ஆவார்? 10

——

சமாஜப் பொன் விழா

G. கலியாணம், M. A., D.Econ.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 50-வது ஆண்டு நிறைவுப் பொன் விழாவும், அதன் அங்கமாகச் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் 30—12—55 வெள்ளிக்கிழமை தொடங்கி மூன்று நாட்கள் சிதம்பரம் இளமையாக்கினர் கோயிலில் நடைபெற்றன.

முதல் நாள் (30—12—55) காலை 7 மணிக்குத் தில்லைத் திருச்சிற்றம்பலவன் திருமுன்னர் வழிபாடும், 'திருவெம்பாவை—திருப்பள்ளி யெழுச்சி' மூலமும் திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் எழுதிய உரையும் சமாஜப் பொன் விழா மலராக வெளியீடும், நடைபெற்றன. பொன் விழாத் தலைவர்-இலங்கை அமைச்சர் கனம் எஸ். நடேசப் பிள்ளையவர்கள், சைவ மங்கையர் மாநாட்டுத் தலைவர்-உயர்திரு. அ. கு. காமாட்சியம்மையார் அவர்கள், எம். ஏ., சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர்-உயர்திரு. வித்துவான் க. வெள்ளை வாரணனர் அவர்கள் முதலியோர் ஆறுமுக நாவலர் கலாசாலையினின்றும் நாதசுர இசையுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வழியில், வரவேற்புக் காரியதரிசி திரு. இரத்தினசாமிச் செட்டியாரவர்கள் வீட்டின் முன்னர் தலைவரவர்கட்குப் பூர்ணகும்ப மரியாதை வழங்கப்பட்டது. திருவாசக அகவல் பாராயணத்துடன் ஊர்வலம் இளமையாக்கினர் கோயிலை அண்மியது. அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் உயர்திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்கள் சமாஜப் பந்தல் வாயிலில் சமாஜக் கொடியை ஏற்றி வைத்தார்கள். சிவஞானப் பந்தரில் மாநாடு கூடியது. ஓதுவாமூர்த்திகள் "செல்வ நெடுமாடம்......" என்ற தொடக்கத்த சம்பந்தர் தேவாரப் பாடலை இறைவணக்கமாகப் பாடினர்கள். திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்கள் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதை அடிப்படையாகக்கொண்டு

தங்கள் கொடியேற்றுச் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். பின்னர், முன்னாள் முதல் அமைச்சர் உயர்திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். அவர்கள், சமயம் வளர ஒழுக்கம் வேண்டும்; பள்ளிகளில் சமய அறிவைப் பரப்பவேண்டும்; தொண்டும் வேண்டும்; பொருளும் வேண்டும்; அதற்கு மூடியிருக்கும் மனதைத் திறக்கவேண்டும் என்று கூறிப் பொன் விழா நிதிக்காகத் தாங்கள் ரூ. 100 கொடுப்பதாக வெளியிட்டார்கள். அவ்வளவில் அங்கிருந்த குடந்தைத் திரு. பி. டி. குமாரசாமிச் செட்டியார் அவர்கள் ரூ. 100-ம், சென்னை திரு. பி. ஆறுமுக முதலியார் அவர்கள் (Inspector-General of Registration) ரூ. 100-ம், சென்னைத் திரு. ஜி. எம். முத்துசுவாமிப் பிள்ளை அவர்கள் (Assistant Secretary, Board of Revenue) ரூ. 100-ம், வரவேற்புத் தலைவர் திரு. ஆடூர் இரத்தினசபாபதிப் பிள்ளையவர்கள் ரூ. 500-ம் நன்கொடையாகத் தர வாக்களித்தார்கள்.

வரவேற்புத் தலைவர் திரு. ஆடூர் இரத்தினசபாபதிப் பிள்ளையவர்கள் தங்கள் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். சமாஜச் செயலாளர் திரு. ச. சிவகுமாரன் விழாத் தலைவர்க்கும், திரு. இராஜேஸ்வரியம்மையார் மங்கையர் மாநாட்டுத் தலைவியர்க்கும், திரு. பு. ர. சுவாமிநாதன் இளைஞர் மாநாட்டுத் தலைவர்க்கும் வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தார்கள். செயலாளர் ஆண்டு அறிக்கையை வாசித்தார். திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்கள். பின்னர் மூன்று தலைவர்களும் தங்கள் தலைமைப் பேருரைகளை ஆற்றினார்கள். (அவை சென்ற மாதம் ‘சித்தாந்த இதழில் வெளியிடப்பட்டன).

அன்று பிற்பகல் 4 மணிக்கு மாநாடு மறுபடியும் தொடங்கியது. திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியாரவர்கள் ‘திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி’ என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். பாவைப் பாட்டு தொன்று தொட்டு வருவது என்றும், தமிழ்நாட்டில் ஐந்து பாவைப் பாட்டுகள் உண்டு என்றும், திருவெம்பாவை, திருப்பாவை

இவைகளுக்குள் வேறுபாடுகள் உண்டென்றும் கூறினார்கள்.

சமாஜச் செயலாளர் கேட்டுக்கொள்ளத் திரு. ம. பால சுப்பிரமணிய முதலியாரவர்கள் உயர்திரு. சர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் படத்தைத் திறந்து வைத்தார்கள். திறப்பாளர் அவர்கள் சர். பி. இராமநாதன் அவர்களின் சமய அறிவு, அரசியலறிவு, இவைகளைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள்; சர். பி. இராமநாதன் அவர்களின் மருகர் திரு. நடேசப் பிள்ளையவர்கள் பொன்னம்பலத்தில் பொன் விழாவில் தலைமை வகிக்க, தாம் முன்னவரின் படத்தைத் திறந்துவைக்கும் வாய்ப்பெய்தியது தாம் பெற்ற பெரும்பேறு எனச் சொல்லிப் பெருமகிழ்வடைந்தார்கள்.

பிறகு, திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் "சிவஞானபோதமும் திருக்குறளும்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். 'எப்பொருளும் ஆக்குவான் ஈசன் ஒருவனே' என்பதில் தொடங்கிச் சிவஞானபோதத்திற்கும் திருக்குறளுக்கும் உள்ள பல கருத்து ஒற்றுமைகளை விளக்கிக் கூறினார்கள்.

திரு. அ. கு. காமாட்சியம்மையார் அவர்கள், 'திருவெம்பாவையும் அரும்பெரும் சேவையும்' என்னும் பொருள் பற்றிச் சொற்பெருக்காற்றினார்கள். மணிவாசகர் அம்மையாராக மாறிப் பெண்ணுள்ளம் படைத்தே திருவெம்பாவையைப் பாடியிருக்க வேண்டும் என்றும், சொல்லுக்கு மாத்திரை குறையக் குறைய சிறப்பு உண்டென்றும், சீவன்—சிவன் ஆவதுபோன்று, மாக்கள் மக்களாகிப் பின் மகள் ஆகியிருக்கவேண்டும் என்றும் மொழிந்தார்கள்.

திருப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் 'சித்தாந்தம்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தென்னாட்டின் தொன்மையான பண்பட்ட நெறி புனிதமான சிவநெறி—தமிழர் அறிவில் பூத்துக் காய்த்துப் பழுத்த அருள்நெறி. அது வளரவேண்டும், சமுதாயப் பணி உடனடியாகச் செய்யவேண்டும், தீண்டாமை ஒழிய வேண்டும், தமிழைப் போற்றவேண்டும், அதற்குத் தொண்

டர்களை உண்டாக்கவேண்டும், சமய நிலையங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து (Chambers of Church) போல உழைக்க வேண்டும் என்று தீவிரமாகப் பேசி முடித்தார்கள். தலைவரவர்கள் தங்கள் கருத்துரையை வழங்கினார்கள்.

அன்று இரவு 9 மணிக்குத் திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள் முன்னுரை கூற, திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் 'சிவயோகம்' என்னும் பொருள்பற்றி நீண்டதொரு தனிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பற்று, ஆசை, பேராசை இவைகளின் வேறுபாடுகளை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். முதல் நாள் கூட்டம் இரவு 12 மணிக்கு இனிது முடிந்தது.

இரண்டாம் நாள் (31—12—55) காலை 8 மணியளவில் இளமையாக்கினார் கோயிலில் வழிபாடு நடைபெற்றது. சைவ மங்கையர் மாநாடு 9 மணிக்குச் சேலம் கல்லூரி விரிவுரையாளர் திரு. அ. கு. காமாட்சியம்மையார் அவர்கள் எம். ஏ. தலைமையில் தொடங்கியது. தலைவியார், மங்கை பங்கன் உருவ அமைப்பையும், இடப்பாகத்தில் தான் இருதயம் இருப்பதால் கருணைக்கிருப்பிடம் என்பதையும், அம்மையப்பர் திருவுருவம் ஆண் பெண் சரி நிகர் சமானம் என்பதற்கு அறிகுறி என்றும் தங்கள் முன்னுரையில் கூறினார்கள்.

பின்னர், திரு. தில்லைக் காமாட்சியம்மையார், திரு. ரா. கற்பகவல்லியம்மையார் திரு. சு. இராஜேஸ்வரியம்மையார் இவர்கள் முறையே 'சமயமும் பெண்களும்', 'சமயமும் பயனும்', 'வழிபாடு' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவியார் தம் கருத்துரை கூறினார்கள். நந்தனார் கல்விக் கழக மாணவியர் தோத்திரப் பாடல்கள் பாடினார்கள். சைவ மங்கையர் மாநாடு இனிது முடிந்தது.

பிற்பகல் 3-30 மணிக்குச் சைவர் மாநாடு தொடங்கியது. 29—12—55-ல் இறைவனடி சேர்ந்த சித்தாந்தப் பேராசிரியர் வித்துவான் திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டும்

என்று கூட்டத்தினர் ஏகமனதாகத் தீர்மானித்து, எழுந்து மௌனமாக நின்று மரியாதை செலுத்தினர். பின்னர், திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் அவர்கள், எம். ஏ. 'சமயகுரவரும் சபாநாதரும்' என்னும் பொருள்பற்றி விரிவுரை யாற்றினார்கள். நால்வரும் நான்கு திருவாயில்கள் வழியாகத் தில்லைக் கோயிலுள் வந்ததையும், அவர்கள் பாடிய பதிகங்களையும், அவர்கள் தில்லையெம்பெருமானின் திருநடங் கண்டு களித்த வண்ணத்தையும் விளங்க எடுத்துரைத்தார்கள்.

அடுத்து, திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள், பி.ஏ., பி.எல். - "மேல் நிற்கும் சொல் என்னும்" என்பது பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில், செயலில் அநேகமாகத் தோல்வியே என்றும், சொல் இரு வகைப்படும் என்றும், ஒன்று பிறர் நம்மைச் சொல்வது மற்றது மனசாட்சி சொல்வது என்றும், இச் சொற்றொடர் அனுமார் வாக்கால் கம்பர் சொல்கிறார் என்றும், வித்தகம் பேச வேண்டாம் பணி செய்யவேண்டும் என்றும் கூறினார்கள்.

வித்துவான் திரு. ஔவை. சு. துரைசுவாமிப் பிள்ளையவர்கள் 'இயற்கை நெறி' என்னும் தலைப்பை யெடுத்துக் கொண்டு சொற்பொழிவு செய்தார்கள். பரந்து, விரிந்து, பெரியதான உலகம், ரேடியோ, டெலிவிஷன், வானவூர்தி இவைகளால் சுருங்கிவிட்டதென்றும், விஞ்ஞானி 'எப்படி' என்பதற்கு விடை கூறுவான் என்றும், தத்துவஞானி தான் 'ஏன்' என்பதற்கு விடை கூறமுடியும் என்றும், நம்மவர் இத்துறையில் நுழைந்தார்கள் என்றும், உடல், உயிர், உலகம் இவைகளின் தன்மையை அறிந்தார்கள் என்றும், உலகுக்கும் உயிருக்கும் வேறாக ஒன்று உண்டென்ற காட்சியைக் கண்டார்கள் என்றும், அதுதான் 'சிவம்' என்றும், அச்சிவத்துக்கும் உலகுக்கும் உள்ள சம்பந்தம் சைவம் அல்லது சிவசம்பந்தம் என்றும், ஆதலின் மூன்றுக்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உள்ளது சைவம் என்றும் விளங்க எடுத்து உரைத்தார்கள்.

பின்னர், திரு. வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'திருச்சிற்றம்பலம்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். சிற்றம்பலம், பேரம் பலம் என இரண்டு உண்டு என்றும், முன்னது ஆன்மாக் களுக்குள் இருப்பது பின்னது உலகத்தில் பரந்திருப்ப தென்றும், தத்துவங் கடந்த பரவெளியில் இருந்துகொண்டு இறைவன் எல்லா உயிர்களுக்கும் நலம் செய்கிறான் என்றும், அதற்காக 'நாடகம் நடிப்பன் நாதன்' என்றும், சம்பந்தர் சீர்காழியில் அண்ணலாரின் ஆனந்த ஒரு பெருந் தனிக் கூத்தை உள்ளேயும், சிதம்பரத்தில் வெளியேயும் கண்டார் என்றும், சித் + அம்பலம்—மெய்ஞ்ஞானமேயான அம்பலம் என்றும், மெய்யுணர்வு கிடைக்குமிடத்தில் பேரின்பக் கூத்து உண்டு என்றும் விரிவாக எடுத்துரைத்தார்கள். தலைவர் அவர்கள் தம் கருத்துரை கூறும்போது "ஆன்மா வில் நடம்புரியும், உள்ளத்தில் நடம்புரியும் இறைவன்" என்று கூறும்போது, கண்ணீர் ததும்ப, மொழி குழற, கனிந்து உருகிப் பேசினார்கள். அவர்களின் நிலை கூட்டத் தினரைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

இரவு 9 மணிக்கு நாகர்கோயில் திரு. ஆறுமுகம் பிள்ளையவர்கள் "சிவஞானபோதச் செம்பொருள்" என்பது பற்றித் தனிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

மூன்றாம் நாள் 1—1—1956 காலை 7 மணிக்குத் தில்லைச் சிதம்பரம் பாண்டி நாயகம் ஆறுமுகப்பெருமான் திருக் கோயிலில் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகம் 22-ஆவது ஆண்டு, 1054-வது காலை வழிபாடு நடைபெற்றது. சிவஞான போதப் பாராயணத்தின் பின் திரு. வீ. திரு ஞானசம்பந்த முதலியார் அவர்கள் 'தில்லைச் சிதம்பரம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

இளமையாக்கினார் கோயிலில் தலைவர்கள் முதலியவர் களைப் புகைப்படம் எடுக்கப்பட்டது. திரு. இரத்தினசாமிச் செட்டியார் அவர்கள் வீட்டில் சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் வட்டுக்கோட்டை திரு. நாகலிங்கம்

அவர்கள் தலைமையில் நடந்தது. சமாஜ உத்தியோகஸ்தர் தேர்தல், தீர்மானங்கள் முதலியன நிறைவேறின.

மாநாட்டுப் பந்தரில், வித்துவான் திரு. க. வெள்ளை வாரணனர் அவர்கள் தலைமையில் சைவ இளைஞர் மாநாடு கூடியது. தலைவர் முன்னுரையின் பின் கீழ்க்காணும் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன :—

திரு. சி. சீனிவாசன் அவர்கள் எம். ஏ.—'மும்மணிக்கோவை'

,, சி. இராமலிங்கம் அவர்கள், எம். ஏ.
—'ஜெர்மானியர் கண்ட மணிவாசகர்'

,, நித்தியானந்தம் அவர்கள் —'களிப்பூட்டும் களி'

,, வித்துவான் கு. திருநாவுக்கரசு அவர்கள்—'சிவநெறி'

,, வித்துவான் சுந்தரேச வாண்டையார் அவர்கள்
—'கண்ணப்பர் அன்பின் திறம்'

,, நா. ஞானசம்பந்தம்—'அப்பர் திலகவதியார்'

,, குசுமஹரிநாதன்—'சைவ சமயம்'

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக மாணவர்கள்—உமாபதிசிவம், அருணந்திசிவம் என்னும் இரு சிறுவர்கள் சைவ சமய வினவிடை நிகழ்த்தினர்கள். தலைவர் கருத்துரையின் பின் இளைஞர் மாநாடு இனிது முடிந்தது.

பிற்பகல் 3-30 மணிக்குச் சைவர் மாநாடு தொடங்கியது. திரு. வித்துவான் டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் 'சோழ மன்னர்களின் சைவ சமயத் தொண்டு' என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சிச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர்கள். (விரிவு அடுத்த இதழில் வெளியிடப் பெறும்.)

சமாஜத் தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்குத் திரு. டி. எம் நாராயணசாமிப் பிள்ளையவர்கள் பட்டங்கள் வழங்கினர்கள்; விழாத் தலைவர் அவர்கள் அன்னருக்கு ஆசி கூறினர்கள்.

திரு. வித்துவான் மு. அருணாசலம் பிள்ளையவர்கள் 'சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம் முதல் அதிகரணம்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திரு. சிவகுமாரன் அவர்கள், யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதியனுப்பிய 'சித்தாந்தம்' என்னும் கட்டுரையை வாசித்தார்கள். தலைவர் அவர்கள் தம் முடிவுரை கூறினார்கள். சமாஜச் செயலாளர் நன்றியுரை பகர்ந்தார்கள். மகாநாடு, கடவுள் வாழ்த்துடன் இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

விழாவின் மூன்று நாட்களிலும் உள்ளூர் வெளியூர்களிலிருந்து திரளாக ஆண் பெண்கள் வந்து சொற்பொழிவுகளைக் கேட்டு இன்பந் திளைத்தனர். வெளியூர் அன்பர்கட்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. திரு. இரத்தினசாமிச் செட்டியார் அவர்கள் இல்லத்தில் அனைவர்க்கும் அறுசுவை உண்டி அளிக்கப்பட்டது. சாரணச் சிறுவர் சிறுமியர் நல்ல சேவை செய்தார்கள். சிவஞானப் பந்தர் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மின்சார விளக்குகளும், ஒலிபெருக்கிகளும் மாடர்ன் ரேடியோ சர்வீசார் அமைத்திருந்தனர். பொன் விழாவின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்தியவர்கள் ஆடூர் திரு. இரத்தினசபாபதிப் பிள்ளை அவர்களும் திரு. இரத்தினசாமிச் செட்டியார் அவர்களுமேயாவர். அவர்களின் இவ்வரும்பெருந் தொண்டிற்கு என்ன கைம்மாறு செய்வது! அவர்கள் இறைவன் திருவருளால் நீடு வாழ்க என்றே வேண்டுதல் செய்யவேண்டும். இருவரும் இரண்டு இரத்தினங்கள் என்று எல்லோரும் போற்றிப் புகழ்ந்தார்கள்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம்எல்லாம்'

———

சமாஜ 50-ம் ஆண்டு அறிக்கை

[மலர் : 29 ; இதழ் : 1 ; பக்கம் : 48ன் தொடர்ச்சி]

வரவேண்டுவது முன்னிலும் இப்பொழுது இன்றியமையாத தாகிறது. இதற்கு அஸ்திவாரம் அங்கத்தவர் ஆவர். ஐம்பது ஆண்டுகளாகச் சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் தளராது தொண்டு புரிந்துவரும் இத்தலைமை ஸ்தாபனமாகிய சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் உறுப்பினர் எண்ணிக்கை ஐயாயிரமாவது இருக்கவேண்டாமா? ஆண்டுக்கு ரூபாய் மூன்று சந்தா செலுத்திச் சித்தாந்தம் பத்திரிகையை இலவசமாகப் பெற்று, சைவ உலகத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனிப்பது ஒவ்வொரு சைவக் குடுபத்திற்கும் தலையாய கடமை யன்றோ ?

நன்றி :—இம் மகா சமாஜத்திற்கு எல்லா வகையிலும் உதவி புரிந்த உறுப்பினர் செயற்குழுவினர் ஆகியோருக்கும், இதன் கூட்டங்களை நடத்திக்கொள்ளத் தம் "குகானந்த நிலய"த்தில் இடம், விளக்கு முதலிய வசதிகளளித்த சென்னை இராயப்பேட்டை, ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையினருக்கும், சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளை நடாத்தித் தந்த பரீட்சாதிகாரிகட்கும், மேற்பார்வையாளர்களுக்கும், சித்தாந்தம் முதலியவற்றைச் செம்மையாக அச்சிட்டுத் தந்த சாது அச்சகத்தினர்க்கும், வெளியூர்களில் சமாஜத்தின் சமயப் பிரசாரக் கூட்டங்களை நடத்தித் தந்த அன்பர்களுக்கும், அவற்றில் சொற்பொழிவு ஆற்றிய பெருமக்களுக்கும், பொதுவாகச் சமாஜத்தின் அன்பர்கள் யாவர்க்கும், சைவ சித்தாந்த மகா சமாஜம் தன் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

இங்ஙனம் :

ச. சிவகுமாரன்

பொதுக்காரியதரிசி

சமாஜ 50-ம் ஆண்டின் வரவு செலவுக் கணக்கு

(1—12—1954 முதல் 30—11—1955 வரை)

வரவு	ரூ.	அ.	பை	செலவு	ரூ.	அ.	பை
சாதாரண சந்தா	1292	3	0	சித்தாந்தம் காகிதம் அச்சுக்கூலி ராப்பர் அறிக்கைகள் முதலியன	1006	5	0
ஆயுள் சந்தா	150	0	0	பேனு புத்தகம் முதலியன	6	11	6
இணைப்புச் சந்தா	6	0	0	தபால் வகை	296	7	0
நன்கொடை	50	0	0	போக்கு வரவு, பிரயாணச் செலவு	61	4	3
தேர்வுக் கட்டணம்	7	0	0	சித்தாந்தம் எடு கூலி ஒட்டுதல் முதலியன	25	6	0
புத்தக விற்பனை	366	1	0	பிளாக்குகள் செய்தது	8	0	0
தபால் வகை (வி. பி. வரவு முதலியன)	97	7	6	பலவகைச் செலவு	21	11	0
பலவகை வரவு	115	0	0	இந்தியன் பாங்கி (deposits)	1248	9	11
பாங்கி வட்டி	8	15	8	பாங்கி கமிஷன் (டில்லி செக்குகள் மாற்ற)	1	2	0
இந்தியன் பாங்கி (Withdrawals)	597	0	0	முடிவில் பொருளாளரிடம் ரொக்கக் கையிருப்பு	43	14	6
ஆரம்பக் கையிருப்பு	29	12	0				
மொத்தம்	2719	7	2	மொத்தம்	2719	7	2

சமாஜப் பொருள் வலிவு : இந்தியன் பாங்கி கணக்கில் இருப்பு ரூ. 1060—3—11, கையிருப்புப் புத்தக மதிப்பு ரூ. 4553—5—0.

சி. திருநாவுக்கரசு ஆண்டுக் கணக்குப் பரிசோதகர்.	ச. சிவகுமாரன், காரியதரிசி.	ம. சி. நித்தியானந்தம், பொருளாளர்.	ச. நடராஜ முதலியார், மாதக் கணித பரிசோதகர்.

பாரிப்பாக்கம் கண்ணப்பனுர்

(26-6-1891—29-12-1955)

ஆசிரியர்

அந்தோ, அவலம், காலம் கொடியது, அன்புடன் பழகிய ஒருவரைத் திடீரென்று மறைத்து விடுகின்றது. சொல்லிவிட்டா அழைத்துக் கொள்ளுகிறது? அதுவும் இல்லையே! ஏன் இவ்வாறு செய்கிறதோ—யாம் காரணம் கூற இயலேம்!

சிதம்பரத்தில் சைவ சித்தாந்தப் பொன் விழா நடைபெறுகின்றது. அதில் செயல் குழுவாளர் எல்லாரையும் பார்க்க விழைந்தோம். அவர்களில் பல் ஆண்டுகள் தொண்டு செய்த பேரறிவாளர் பாரிப்பாக்கம் கண்ணப்பர் அல்லவா? அவர் ஏன் காணவில்லை என்று நினைத்தோம். வானிலிருந்து இடி விழுந்தாற்போல ஒரு செய்தி வெளிவந்தது. கண்ணப்பனுர் அவர்கள் மார்படைப்பால் எம்மைவிட்டு மேலுலகு அடைந்தார் என்ற ஆற்றமுடியாச் செய்தி. இதனை அப்பேரவையில் எடுத்துக் கூறவும் மக்கள் தயங்கினுர்கள். இறுதியில் ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு நாத் தழுதழுப்ப அச் செய்தி வெளியிடப்பட்டது. அவையில் இருந்தோர் அனைவரும் கண்ணீர் விட்டார்கள். இரண்டு நிமிடம் மௌனமாக இருந்து அவர் இறைவன் திருவடி அடைந்தது கூறிப் பிரிவாற்ருமை புலப்படுத்தி, அவரது ஆன்மா நற்கதி அடையும்வண்ணம் இறைவனை வழுத்தி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அந்தோ அவலம்!

1938-ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் கோவையில் 33-வது சித்தாந்த மகாநாடும் சைவ மாநாடும் நடைபெற்றன. அப்போது திரு கண்ணப்பனுர் அவர்கள் "சமயத்தில் காணும் உயர்ந்த தத்துவங்கள்" என்ற பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினுர்கள். அப்போது தான் அவரை நான் நேரில் கண்டு களித்தது. அவர் பேச்சையும் அப்போதுதான் கேட்டது. அப்பேச்சு ஒரு தனிப்

பட்ட முறையில் இருந்தது. அது இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டு இருக்கிறது. தொடக்கம் முதல் இறுதி வரையில் ஒரு ப்தட்டமும் இன்றி ஒரே இசையில் நல்ல தெளிநீர் குடிப்பதுபோல அது இருக்கும். ஏற்றத்தாழ்வோ, தயக்கமோ, நிறுத்தமோ, மெய்ப்பாட்டில் வேற்றுமையோ எதுவும் காண இயலாது, ஒரே தொனி முதலிலிருந்து இறுதி வரை ஓடிக்கொண்டு இருக்கும். எடுத்துக்கொண்ட பொருள் மிக விளக்கமாக எவர் நெஞ்சையும் கவர்ந்து இழுத்துக்கொள்ளும் முறையில் இருக்கும். கண் மறைவில் இருந்து கேட்பவர்கள் இவர் எழுதிப் படிக்கின்ருரோ என்று ஐயுறல் வேண்டியிருக்கும். இவரது நாவன்மை அத்தனைத் திறத்தில் அமைந்து இருக்கும். கதை கூறினலும் ஒன்றே; கடினமான சித்தாந்தக் கொள்கைகளை விரித்தாலும் ஒன்றே. எதிலும் ஒரே நிலையான பேச்சே இருக்கும். ஒரு முறை கேட்டால் போதும். வேறு எந்தக் கூட்டத்திலும் அதேமாதிரி இருக்கும். வெகு தொலைவிலிருந்து கேட்டாலும் கண்ணப்பனர் பேச்சு என்று கண்டுகொள்ள முடியும். பேச்சு தெளிவாய் இருப்பது மட்டும் அன்றி ஒலி வெண் கலக் கிண்ணி ஓசையைப்போல இருக்கும். இதுதான் அவரைப்பற்றிச் சென்ற ஆண்டுகளாக நான் அறிந்த ஒரு சிறப்புச் செய்தி.

அவரது சித்தாந்த ஞானத்தைப்பற்றிக் கூறவேண்டிய தில்லை. வெகு நன்ருகச் சித்தாந்தக் கொள்கைகளைப் பாகு படுத்தி உணர்ந்திருக்கின்ருர். எந்தச் சபையிலும் அஞ்சாது தம் கருத்துக்களை எடுத்துக் கூறும் ஆற்றல் அமைந்தவர். பண்டைக்கால அறிஞர்களைப் போன்று பண்டை முறை களையே கூறிக்கொண்டு காலம் தள்ளுபவர் அல்லர். தற்கால ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெகு தீவிர நம்பிக்கைகளைக் கொண்டிருப்பவர். இதற்குக் காரணம் இளமையிலே பல பெரிய சைவ அறிஞர்களிடம் கற்று அவர்களோடு உறவாடிக்கொண்டு இருந்த பெருமையே என்று கூறலாம். தமது நெஞ்சில் உண்மை என்று பட்டால் போதும். பழைய நம்பிக்கைகளை உதறித் தள்ளித் தாம் கண்ட உண்மை

களை வெளியிடுவதில் சிறந்த தீரர். அவ்வாறே எத்தனை பேர்கள் தமிழ்நாட்டில் உள்ளார்கள்.

அவ்வாறு அஞ்சாமல் வெளியிட்ட கொள்கைகளில் ஒன்று 'தமிழ்ச் சிவஞான போதம் மொழிபெயர்ப்பு அல்ல, முதல் நூலே' என்பதாகும். இதற்கு நூற்றுக்கு மேலான காரணங்களைக் கூறித் தக்க சான்றுகளோடு வெளியிட்ட பெரியார் கண்ணப்பனாரே ஆவார்.

சைவ அன்பிலும் ஒழுக்கத்திலும் தீவிரப்பற்று உடையவர். எப்படிப்பட்ட தீங்கு நேரிட்டபோதிலும் தமது கொள்கைகளையும் நாட் பணிகளையும் விட்டுக்கொடாதவர். இளமை முதற்கொண்டே 'பட்ட காலிலே படும்' என்ற பழமொழிக்கு இணங்கக் கணக்கற்ற இடையூறுகளில் சிக்கி உழன்றார். அப்படி உழன்றபோதிலும் சிறிதும் நெஞ்சழியாமல் சைவத்திற்கு உழைத்தார். எண்ணிறந்த இளைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்துத் தமிழ் வாஞ்சையையும் சைவப் பற்றையும் ஊட்டி வந்தார். சென்னையிலும் சுற்றுப்பக்கங்களிலும் நடைபெற்ற எந்த அவையிலும் அவரைக் காணலாம்; அவருடைய பேச்சைக் கேட்கலாம். இந்த வகையில் சிறந்த தொண்டை இயற்றி உயர்ந்த எடுத்துக் காட்டாக விளங்கினார்.

கண்ணப்பனாரின் திருவுருவம் மிகச் சீரிய வடிவு கொண்டது. எந்தச் சபையிலும் அதனை வெகு எளிதில் கண்டு கொள்ளலாம். உருண்டை முகம், கூரிய கண்கள், கண்ணாடிக்குள்ளிருந்தும் ஊடுருவிப் பாயும் பார்வை, எப்போதும் தலைப்பாகையில் தலை அலங்கரித்து நிற்கும். கச்சம் போட்ட தூய வெள்ளை உடை, தற்காலக்குப்பாயம், கோகலே போன்று கழுத்தைச் சுற்றி ஒருபுறம் தொங்கும் மேல்வேட்டி— இவ்வாறான திருவுருவத்தை எளிதில் தெரிந்து கொள்ள முடியாதா? அப்படிப்பட்ட பெரியார் மறைந்து விட்டார். அவரை ஒருமுறை பார்த்தவர்கள் எப்போதும் மறக்கவேமாட்டார்கள்.

அன்னார் சமாசத்திற்குச் செய்திருக்கும் தொண்டுகள் பல. சமாசத்தின் செயற் குழுவாகப் பலமுறை இருந்து



"பாரிப் பாக்கம் எழுசைவப் பரிதி! பசுமைத் தமிழ்த்திங்கள்!
வேரி அருவிக் கலைச்சோலை! வேதத் தென்றல்! குணக்குன்று!
மாரி அன்ன கண்ணப்ப வள்ளல்!........." —திரு. வி. க.

அளித்துதவியவர்கள் :—மாணவர் மன்றத்தினர், சென்னை.

தொண்டாற்றியதுமன்றிச் சித்தாந்தத்திற்கு ஓராண்டு துணையாசிரியராக இருந்திருக்கின்றார். சிவனடியார் திருக்கூட்டம், மாணவர் மன்றம், வேளாண் சங்கம் முதலிய பல அவைகளிலும் பெரும் பங்கு எடுத்துக்கொண்டு உழைத்திருக்கின்றார்.

சிற்பப்பள்ளியில் நல்ல தேர்ச்சி பெற்றுப் பரிசும் பெற்றவர். சிற்ப வேலையிலேயே சில அளவு அலுவலகத்தில் உழைத்து ஊதியம் பெற்றுப் பணி செய்துவந்தார். ஓய்வு பெற்றும் வெறுமனே இராமல் சைவத் தொண்டிலேயே ஈடுபட்டு வந்தார். நம் கண்ணப்ப முதலியார் அவர்கள், சிவத்திரு. மறைமலை அடிகளாரின் மாணவரும், பச்சையப்பன் கல்லூரியின் முன்னைத் தமிழ்ப் பேராசிரியரும் ஆகிய மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களின் அரும்பெறல் மாணவராவார் என்பதும், சென்னைத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவர் - புலவர் - மயிலை சிவமுத்துக் குமாரசாமி முதலியார் அவர்கள், நம் கண்ணப்பரோடு உடன்பயின்ற உழுவலன்பினராகிய உயிர்த் தோழர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடற் பாலனவாகும். அன்னார் பிரிவு தமிழ்நாட்டிற்கும் சைவ உலகத்திற்கும் பெரும் நட்டம் என்றால் மிகையல்ல. அன்னார் ஆன்மா இறைவன் திருக்கழல்களில் அமைதி பெறுவதாகுக.

மெய்ப்பொருள் நாயனார்

கோ. ச. ராஜன்

கோதிலாச் சிறப்புக்கள் பல பெற்றது சேதி நன்னாடு. அந்நாட்டின் முக்கிய நகரங்களுள் திருக்கோவலூர் ஒன்று. திருக்கோவலூரினைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர் சேதி நாதர் என்ற மன்னர். ஆண்டவனிடத்தில் அளவற்ற அன்பு பூண்டவர் சேதிநாதர். சிவனடியார்க்குச் சிறப்பு பல புரிபவர். அரசியல் நெறியிலும் அறநெறியிலும் வழுவாமல் அரசாண்டு வந்த சேதிநாதர், தம் வரைநெடுந் தோளால் எதிரிகளை முறியடித்து நீதி மிக்கோராய், அன்பர் வேடமே சிந்தையில் பதித்து வாழ்ந்து வந்தார்.

உமையொரு பாகங்கொண்டான் உறைவிடமாம் திருக் கோயில் எங்கணும் பூசைநீடி ஏழிசைப் பாடல் ஆடல் பொங்கிய சிறப்பின் மல்கப்போற்றுதல் புரிந்து வந்தார் சேதிநாதர். தன்னை யடைந்தார் துயர்தீர,

"தேடிய மாடும் நீடுசெல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்காவன ஆகும்"

என எண்ணிக் குறைவறக் கொடுத்துவந்தார்.

இவ்வாறிவர் பல்வகைச் சிறப்புடன் வாழ்தல் கண்ட பகைநாட்டரசன் பொருமை பூண்டான். வெல்லும் எண்ணத்துடன் பொரவந்த பகைவன் பன்முறை முயன்றும் பலனின்றித் தோற்றுப் பரிபவப்பட்டுப் போனுன். இகலினுல் வெல்ல இயலாமையால் மாற்ருன் சூழ்ச்சியால் வெல்ல எண்ணினுன். சேதிவேந்தராகிய மெய்ப்பொருள் வேந்தர் சிவன்பால் பூண்ட மெய்யன்பினுல் சிவனடியாரை அன்புடன் ஆதரித்துப் போற்றிவந்தார். இஃதறிந்த பகை மன்னன் முத்தநாதன் தானும் ஓர் சிவனடியார்போல மெய்யெலாம் நீறுபூசிச் சடைமுடிகள் முடித்துக் கட்டிக் கையினில் புத்தகக்கவளி ஏந்தித் திருக்கோவலூர் வந்தடைந்தனன். அவனது மனம் சூழ்ச்சியால் நிறைந்து, "மைபொதி விளக்கே" என்ன விளங்கிற்று.

இவ்வாறு மாதவவேடங் கொண்ட மாற்ருன், மாட மாளிகைகளைக் கடந்து, சோதி வெண்கொடிகள் ஆடுஞ் சேதியர் பெருமான் கோயில் வாயிலில் சேர்ந்தான்.

உடன் வாயிற்காப்போர் தடையேதுமின்றி உள்ளே விட்டனர் மெய்யன்பர் என்ற காரணத்தால். சிவனடியார்களைத் தடைசெயல் கூடாதென்பது அரசனுணை போலும்! அரசர்க்கு மெய்காப்பாளனுகிய தத்தன் என்பான் அரசர் துயில் கொண்டுளார் "தாங்கள் எது கருதி இவ்விடம் போந்தீர்" என வினவினன். வஞ்ச நெஞ்சங்கொண்ட முத்தநாதன், "யான் அவற்குறுதிகூற நின்றிடு நீயும்" என்று கூறி அவனையும் அவ்விடத்தே நிறுத்தி, உள் புகுந்தனன். உள்ளே அரசர் உறங்கிக்கொண்டிருந்தார். உடன் அரசனது தேவியார் இருக்கக் கண்டான் முத்தநாதன்.

ஓர் சிவனடியார் வருவதை யுணர்ந்த தேவி தன் நாயகனை உறக்கத்திலின்றும் எழுப்பினுள். அரசன்

சிவனடியார் வந்துளதை உணர்ந்தார். உடன் குவித்த செங்கை கொண்டிழிந்தெதிரே சென்று வணங்கி நின்று, "மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்தணைந்ததென்ன இங்கெழுந்தருளப் பெற்றதென்கொலோ?" என வினவினர். அவ்வினு கேட்ட முத்தநாதன், "உங்கள் நாயகனுர் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல் எங்குமில்லாதது தொன்று கொடுவந்தேன் இயம்ப" என விடை பகருற்ருன். அவ்வுரைகேட்ட அரசன் இதனினும் வேறு பேறு எனக்கு யாதுளது? "பிரானருள் செய்த இந்த மாறிலாகமத்தை வாசித்தருளல் வேண்டும்" என இறைஞ்சினுர். தான் எண்ணிய செய்கையை ஈடேற்றத் தனிமையே சிறந்ததென்று முத்தநாதன் ஆலோசித்துக் கூறுவான்,

"நாறுபூங் கோதை மாதுதவிரவே நானும்நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்"

ஓர் மன்னனைத் தனிமையாக வேற்ருன் ஒருவன் சந்திக்க முயல்வது சந்தேகத்திற் கிடமளிப்பதே எனினும் சிவனடியார் என்ற காரணத்தால் அரசர் "திருமகள் என்ன நின்ற தேவி"யாரை நோக்கி அந்தப்புரம் செல்லுமாறு ஏவினுர். பின்னர் தருதவ வேடத்தானுகிய முத்தநாதனைத் தவிசின்மேல் இருத்தித் தாமும் நிலத்திலமர்ந்து "இனியருள் செய்யும்" என்று வேண்டினுர். கையிலிருந்த வஞ்சகக் கவளிகையினை மடிமேல்வைத்துப் புத்தகம்அவிழ்ப்பான்போன்று அவிழ்த்து, அரசர் வணங்கும்போதில் கத்தியை எடுத்துத் தான்முன் நினைந்த அக்கொடிய செய்கையைச் செய்து முடித்தான் கபடவேடதாரி. அந்நிலையிலும் "மெய்த்தவவேடமே மெய்ப்பொருள்" எனத் தொழுது மன்னர் நிலத்தில் சாய்ந்தார்.

இவ்வேடதாரி உள்ளே புகுந்தபோதே தத்தனுக்குச் சந்தேகம் தோன்றிற்று. எனவே அரசன் வீழ்ந்த சப்தம் கேட்டதும் உள்ளே புகுந்த தத்தன் கபடனைக் கொல்ல வாளை உருவினுன். செங்குருதி சோர, மன்னன் "தத்தா! நமர்" எனத் தடுத்து வீழ்ந்தார். வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப்பட்ட தாதனுகிய தத்தன் தலையினுல் வணங்கி, "யாதுநான்செய்கேன்" என இறைஞ்சிநின்ருன்.

"எம்பிரான் அடியார்போக மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய்விடு நீ" என்று கூறியருளினார். தன்னைக் கொன்றவன் சிவசின்னமணிந்தவன் என்ற காரணத்தால் அவனைத் தீங்கு ஏதும் ஏற்படாவண்ணம் நகர் எல்லையில் விட்டுவருமாறு கூறிய அரசரின் அருளை எவ்வாறு வியத்தல்?"

அரசரின் முடிவினைக் கேட்டார் அனைவரும் "அரசனைத் தீங்கு செய்த பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்" என வெகுண்டு சூழ்ந்தனர். ஆயின் உண்மை ஊழியனான தத்தனும் அவரை எல்லாம் தடுத்து, "இத்தவன் போகப்பெற்றது இறைவனது ஆணை" எனக் கூறினான். அரசன் ஆணை எனவே அனைவரும் அஞ்சி அகன்றனர். தத்தன், நகர்கடந்து வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டபின் மீண்டுபோந்தனன். அரண்மனையில் அரசன், தத்தன் திரும்பிவந்து கூறும் மொழிகட்காக ஆவிதாங்கிக் காத்திருந்தனன்.

"மற்றவன் கொண்டுபோன வஞ்சனை வேடத்தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவிதாங்கும்
கொற்றவன்"

எனச் சேக்கிழார்பெருமான் குறிக்கின்றார். தத்தனும் வேந்தரை வணங்கி, "தவவேடங் கொண்டு வென்றவர்க்கிடையூறின்றி விட்டனன்" என்று கூறினான். அரசனும் ஆனந்தமெய்தினர்.

அரசியல் ஆயத்தார் பலரையும் ஒன்று கூட்டி "விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீர்" என வேண்டினர் உடன் இமயப்பாவை துணைவனார் எதிரே தோன்றிக் காட்சிதந்தருளி,

அண்டவானவர் கட்கெட்டா அருட்கழல் நீழல்சேரக்
கொண்டவர் இடையறாமல் கும்பிடுங்கொள்கை ஈந்தார்."

இன்னுயிர் செகுக்கக்கண்டும் எம்பிரான் அன்பர் என்றே நன்னெறிகாத்த சேதிநாதனார் பெருமை வாழ்க! வாழ்க திருநீற்றன்பு!! வாழ்க மெய்யடியார்!!

ஒளிவளர் விளக்கு

ச. சிவகாமி அம்மையார்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் ஒன்பதாவது திருமுறையாக விளங்குவது திருவிசைப்பா, திருப்பல்லாண்டு. இதன் ஆசிரியர்கள் ஒன்பது பேர். இவர்களுள் முதலாவதாக விளங்குபவர் திருமாளிகைத் தேவர். இவர் பாடிய பதிகங்கள் திருப்பல்லாண்டோடு சேர்த்து ஐந்து. திருவிசைப்பாப் பதிகங்களில் முதல் பதிகம் **ஒளிவளர் விளக்கு**. இப்பதிகம் சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரத்தில் வரும் "ஞானக்கண்" என்பதன் இலக்கியமாக விளங்குவது. இதிலுள்ள சில பாடல்களின் கருத்துக்களை விளக்குவது இக் கட்டுரை.

உயிர்களிடத்திலே அறியாமை நிறைந்துள்ளது. எப்படிப்பட்ட அறிவாளிகளும் சில சமயங்களில் இதை நான் இன்றே அறிந்தேன். இப்பொழுதுதான் அறிந்தேன். சென்ற நிமிடம் வரையிலும் இதைப்பற்றி அறியாதிருந்தேன் என்று தினந்தோறும் ஏன்? கணந்தோறும் தங்கள் வாழ்வில் அறிவு விளக்கம் பெற்று வருவதைக் கூறக் கேட்டும், கண்டும் வருகின்றோம். எனவே அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் ஏதோ ஒன்று எல்லோரிடமும் இருக்கின்றது என்று தெரிகின்றது. உயிர்களுக்கு அறியும் சக்தி இருந்தும் அறியமுடியாதபடி தடைசெய்து கொண்டிருப்பது எதுவோ அது மலம். கண்ணின் ஒளியை மறைக்கின்ற கண்நோய் ஆகிய படலம்போல் ஆன்மாவின் அறிவை மறைத்துக் கொண்டிருப்பது மலம். செம்பில் களிம்புபோல மலம் உயிர்களை அநாதியே பற்றி நிற்கும். அதனால் உயிர்களின் அறிவு, இச்சை, செயல்கள் விளக்க இடையாமல் மறைக்கப்படுகின்றன. இப்படி ஆன்மாவின் அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் மலத்தை ஆணவம், இருள், நோய், அழுக்கு என்று சைவ சித்தாந்தம் கூறும். மந்த அழுக்கு நீங்கினால்தான் உயிர்களின் அறிவு, இச்சை,

செயல்கள் விளக்கமுற்று இன்பம் பெறும். அறியாமை தேய்ந்து அறிவு விளக்கம் அடைந்தபோதுதான் மக்கள் இன்பம் பெறுகின்றனர். அழுக்கு தானே நீங்காது. அழுக்கை நீக்கிக் கொள்ளும் ஆற்றல் ஆவிக்கும் இல்லை. எனவே இறைவன்தான் அழுக்கை நீக்கவேண்டும். அதனால், ஆன்மாக்களின் அழுக்கை நீக்கி இன்ப வீடளிப்பதற்காக இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்து தொழில்கள் செய்கின்றான்.

ஆன்மாக்களுக்கு உடல், கருவி, உலகம், நுகர்பொருள் முதலியவற்றைத் தருதல் படைத்தல். தரப்பட்ட இவைகள் ஆன்மாக்களின் வினைக்கீடாக அனுபவிக்கின்ற காலம் வரை நிலைக்கச் செய்தல் காத்தல். ஆன்மாக்கள் இவற்றோடு பொருந்தி அனுபவிக்கும்போது ஏற்படும் களைப்புத் தீரச் செய்வது அழித்தல். இனி ஆன்மாக்கள் போக நுகர்விலே அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவிக்கும்போது அதிலுள்ள குணங் குற்றங்கள் தெரியாவண்ணம் மறைத்து, நுகர்வில் அழுத்துவித்தல் மறைத்தல். போக நுகர்வில் அழுந்திய உயிர்கள் அதனால் ஏற்படும் இன்ப, துன்பங்களால் பக்குவம் பெற்றுச் சுத்தம் எய்திய உடன் அருட்பதிவு செய்து பேரின்பம் கொடுத்தல் அருளல். இவ்வைந்து தொழில்களையும் இறைவன் ஒருசேர ஆக்குகின்றான். இவ்வைந்தொழில் உலகத்திலும், உடம்பிலும் இடையீடின்றி நடைபெறுகின்றன. இதுவே இறைவனுடைய அருள் ஆடல் (திருக்கூத்து) அசைவு. இந்த அசைவினாலேயே எல்லா உலகங்களும், உயிர்களும் இயங்குகின்றன. இவ்வுண்மையை உணர்ந்து அவனது திருவடிக்கீழ் (இறைவனது அறிவு செயல்களுள் ஆன்மாவினது அறிவு செயல்) அடங்கி நிற்பதே திருவருள் ஞானம். இத்திருவருள் உணர்வு பெற்ற பெரியார் திருமாளிகைத் தேவர். அவர் பெற்ற திருவருள் உணர்வே ஒளிவளர் விளக்காயிற்று. இப்பதிகம் இறைவன் திருஅருள் துணையின்றி ஆன்மாவுக்கு யாதொரு செயலும் இல்லை என்பதைப் பரக்கப் பகர்கின்றது.

ஒவ்வொரு பாடலிலும் ஈற்றடியில் "தொண்டனேன் விளம்புமா விளம்பே, பணியுமா பணியே, கருதுமா கருதே, உரைக்குமாறு உரையே, நணுகுமா நணுகே, இசையுமாறு இசையே, நுகருமா நுகரே, புணருமா புணரே, விரும்புமா விரும்பே, நினையுமா நினையே" என்றமை காண்க.

திருமுறைகள் இறைவன் ஒளிவடிவினன் என்பதைப் பல இடங்களில் கூறியுள்ளன. அவ்வொளி எத்தகையது? திருமாளிகைத் தேவர் அவ்வொளி உலகில் காணப்படும் ஒளிபோன்றதல்ல, விண்ணிலே உலவுகின்ற ஞாயிறு முதலிய ஒளி, இந்திரிய அந்தக்கரண ஆன்ம போத ஒளி, அனைத்தையும் விளக்கி இவற்றிற்கு மேலாய், கேடில்லாத சுயஞ் சோதியாய், பரஞ்சோதியாயுள்ள, பர ஞான ஒளி அவ்வொளி, மாற்ற மனங்கனிய நிற்பது. ஆன்மாவின் ஆராய்ச்சி அறிவிற்கு அப்பாற்பட்டது, திருவருள் உணர்வால் உணரப்படுவது, திருவடி ஞானம் பெற்றோர் உள்ளத்தில் திரண்டு விளங்குவது, தேனாய் இன்பந் தருவது. அன்பு உருகிப் பெருகும் உள்ளத்தில் கனியாய்த் திகழ்வது. அருள் வெளியிலே இடையறாது தானும் ஆடிக்கொண்டு எல்லா உயிர்களையும் ஆட்டி வைக்கும் கருணையே திருவுருவமாகக் கொண்டு, தில்லையம்பலத்தை ஆடும் இடமாகக் கொண்டு தெய்வக் கூத்து விரும்பிச் செய்வது. அப்பரம் பொருளின் புகழ்களைக் கூறவேண்டுமென்றால் அவனே நம் உள் நின்று உணர்த்தி (ஆசிரியர் மாணக்கன் கையைப் பிடித்து எழுதுவதுபோல) நமது நாவை அசைவிக்க வேண்டும் என்று பாடியுள்ளார்.

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அறிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

இரண்டாவது பாட்டில், இறைவன் ஆன்மாக்களிடத்தி லுள்ள அறியாமையை (மலத்தை) சிறிது சிறிதாக, முழுதும் நீக்கி நுண்மையாய் உள்நின்று உணர்த்திப் புனிதமான வியாபக அறிவைத் தந்து அறிவுக்கறிவாய் விளங்கு கின்ருன். அவன் புறத்திலும் வெளிப்பட்டுத் தோன்றும் தன்மையன் என்பதைக் கூறி இருக்கின்ருர்.

இடர்கெடுத்தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணிவிளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதீ !
அடல்விடைப்பாகா ! அம்பலக் கூத்தா !
அயனெடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின்ருயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

எட்டாவது பாட்டில் சிவநெறி ஒன்றே பிறவியை வேரோடு களையும் நன்னெறி. மற்றைய நெறிகளெல்லாம் பிறவியை ஒழிக்காது, நெறியல்லா நெறி என்று கூறப்பட் டுள்ளது.

இப்பதிகத்தில் கூற்றுதைத்தது, மேருவை வில்லாக வளைத்தது, திரிபுரம் எரித்தது, இராவணனை அடர்த்தது முதலிய பல கதைகளைக் குறிக்கும் சொற்ருெடர்களும் வந்துள்ளன. இவைகள் எல்லாம் இறைவனுடைய பேராற் றலையும் பெருங் கருணையையும் நினைவூட்டுகின்றன. நல்ல பண்ணோடு அமைந்து தேனும் இன்னமுதமாய்த் தித்திக்கும் இப்பாடல்கள் யான், எனது என்னும் செருக்கை அகற்றும்.

நரஸ்துதி ஒழிக

ஆ. அப்பாத்துரை, வேளுக்குடி

நரஸ்துதி ஒழிக ! இது நான் கூறும் கூற்றல்ல. பல நூற்ருண்டுகளுக்கு முன்பு திருநாவலூர் என்னும் திருப் பதியில் சடையனர் என்னும் சிவாசாரியாரது அருந்தவ

மனைவியராகிய இசைஞானியார் என்பவரிடத்தில் திரு அவதாரம் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூற்றுகும். நம்பியாரூரால் நவிலப்பட்டது என்று சொன்னால் போதுமா? நம்பியாரூரர் என் சொன்னார்? எங்கு சொன்னார்? என்பன போன்ற வினக்கள் எம்மனோர்க்கு எழுவது இயல்பே. வினக்களுக்குரிய விடைகள் கீழே இருப்பதை நான் சொல்லி நேயர்கள் தெரிந்து கொள்ளவேண்டுவதில்லை.

எல்லாம் வல்ல இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நம்பியாரூரர் பல தலங்களையும் தரிசிக்கச் சென்றார். இவர் இறைவனின் இச்சைப்படி, "பித்தா பிறை சூடி" என்னும் சொற்றொடரை முதலாகக்கொண்ட திருப்பதிகத்தைப் பாடியருளினர். இவ்வாருக இவர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு வருகையில் பரவையார் பங்குனி உத்திரச் செலவிற்குப் பொன் வேண்டினர். எனவே பரவையாரின் விண்ணப்பத்திற்கு இணங்க எண்ணிய சுந்தரர் திருப்புகலூரை அடைந்தனர். திருப்புகலூரில் நித்திரை செய்ய வேண்டி அக்கோயில் உள்ளிருந்த செங்கற்களைத் தலையணையாக வைத்துத் தூங்கினர். துயில் நீங்கி எழுந்த பின்னர் செங்கற்களெல்லாம் பொன்னுலாகிய கற்களாய் இருப்பதைக் கண்டார். பொன்னுலாகிய கற்களைக் கண்ட நம்பியாரூரர், "தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் பொற்குவியலைப் பரவையாருக்குத் தந்தனர். நம்பியாரூரர் "நரஸ்துதி ஒழிக" என்று நவின்றது இத்திருப்புகலூரிலேயாம்.

ஒரு துறையில் பழக்கப்பட்டவர் அந்தத் துறையிலே வருபவருக்குப் புத்திமதி கூறலாம். உதாரணமாக ஓர் சிறந்த பாடகர் மற்றப் பாடகர்களுக்கு, "இப்படி இந்த ராகத்தைப் பாடவேண்டும் அல்லது அப்படிப் பாடவேண்டும்" என்று கூறலாம். அவர்களும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடும். ஓர் கல்லூரிப்பேராசிரியர் தனது கீழ் இருக்கும் ஆசிரியரைப் பார்த்து, "மாணவர்களிடம் இப்படி நடந்து கொள்ளல் வேண்டும் அல்லது மாணவர்களுக்கு இந்தப்பாடத்தை இவ்வாருகப் போதித்தல் வேண்டும்". என்று கூறலாம். அவர்

களும் அதை எற்றுக் கொள்ளக்கூடும். அதே போலத்தான் நம்பியாரூரும் நடக்கிறார். அதாவது நம்பியாரூரர் ஓர் நற்றமிழ்த் தெய்வப் புலவர். அவர் புலவர்களுக்குப் புத்திமதி கூறுகின்றார். திருப்புகலூர்ப் பாடல்களின் வாயிலாக, "நரஸ்துதி ஒழிக" என்று நம்பியாரூரர் செப்பியதற்குரிய காரணங்கள் பலவாம். அவற்றுள் சில.

ஆடவன் - ஆனால் ஆண்மை இழந்தவன், மிடுக்கு இலாதவன். அவனைப் பார்த்து வீமனே என்றும் வில் வித்தைகளில் தேர்ச்சி பெற்ற விசயனைப்போல் இருக்கின்றனன் என்றும் இயம்புவர். வேறு ஒருவர் சிக்கனம் பிடிப்பவர், சிறிதளவு அன்னத்தையாவது பிறருக்குக் கொடுத்தறியாதவர், என்னுடைய பாஷையிலே செப்பவேண்டுமானால் கஞ்சப்பிரபு, இம்மாதிரியாக இருப்பவரைப் பார்த்து, "உனது சுற்றத்தைப் பேணி விருந்தோம்புகின்றாய், விருந்தோம்பும் தலைமகன் நீயே! வள்ளலும் நீயே" என்பர். இம்மாதிரியாகவே உலகில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து இல்லாதவைகளை இருப்பதாகக் கூறுகின்றார்கள். கல்லாத மூடனைப் பார்த்துக் கற்றறிந்த பெரியோனே என்றும், நரைகள் போந்து மெய்தளர்ந்து மூத்துடல் நடுங்கி நிற்கும் கிழவனைப் பார்த்து வரைகள் போல் திரள்தோ ளானே என்றும், மகாதுட்டனை, வஞ்ச நெஞ்சனை, மாசழக்கனைப் பாவியை வழக்கில்லியைப் பஞ்ச துஷ்டனைச், சாதுவே யென்றும், நல மிலாதானை நல்லனே என்றும், நரைத்த மாந்தனைப் பார்த்து வாலிபனே யென்றும், குல மிலாதானைக் குலவனே யென்றும் கூறுவர்.

மற்றும் சதாநேரமும் நோயால் வாடுகின்றவனைப் பார்த்துத் தடந்தோளனே என்றும், "எள் விழுந்திடம் பார்க்குமா கிலுமீக்கு மீகிலனாகிலும் வள்ளலே யெங்கள் மைந்தனே" யென்றும், முற்றிலாதனை முற்றனே யென்று மொழிதலும், "தையலாருக் கோர் காமனே சால நல அழகுடை ஐயனே—கையுலாவிய வேலனே" என்றும் மொழிவர்.

மேற்கூறியவாறெல்லாம் ஒருவனிடத்துக் காணப்பட முடியாதவைகளைப் காண்பதாகக் கூறினாலும் மாந்தர்கள் அசைய மாட்டார்கள். இதைத்தான் ஒவ்வொரு பாடலி லும் நம்பியாரூரர் நவிலுகின்றார். ஒருவனை எவ்வளவுதான் உயர்த்திக் கூறினாலும், ஈயாதானை வள்ளல் என்று கூறினா லும், அவன் வாரிக் கொடுக்க மாட்டான். எனவேதான் நரஸ்துதி ஒழிக என்று புலவர்களுக்குப் புகன்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் புலவர்களைப்பார்த்துக் கூறு கின்றார். "புலவீர்காள்! நீங்கள் எந்த மானிடனையும் மதித்துப் பாடாதீர்கள். அவர்கள் உங்களுக்கு ஒன்றும் கொடுத்துதவ மாட்டார்கள். எனவே பொடிக் கொள் மேனியெம் புண்ணியன் புகலூரைப் பாடுமின்" என்கிறார். எனவேதான் 'நரஸ்துதி ஒழிக' என்று தலைப்பிட்டேன்!

மேலும் "நரஸ்துதியை வெறுக்கின்ற" வகையிலே பத்துப் பாடல்களில் நம்மாழ்வார் புலவர்களுக்குப் புத்திமதி கூறுகின்றார். "சொன்னால் விரோதம் இதாகிலும் சொல்லுவன் கேண்மினோ, என்நாவில் இன்கவியான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்" என்றும், "என்னாவது எத்தனை நாளுக்குப் போதும் புலவீர்கள், மன்னு மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்" என்றும், "வம்மின் புலவீர் நும்மெய் வருத்திக் கைசெய்துய்ம்மினோ" என்றும், "வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேன் அல்லேன்" என்றும் உபதேசிப்பதை நன்கு காணலாம்.

இவ்வாறே வேறு பல தெய்வப் புலவர்களும் பாடுவதை நன்கு உணரலாம். எனவே கடவுளைப் பாடுவதை விட்டு மக்களைப் பாடுவதை மேற்கொள்ளும் கவிகளுக்கு இத் தகைய உபதேசங்கள் நன்மை தரும் என்றே நம்பலாம். இக்காலத்தில் இந்த உபதேசம் மிகவும் தேவையானது.

நடந்தவை

1. சிதம்பரம் :—26 முதல் 31 டிசம்பரும் 1 ஜனவரியும். முதல் மூன்று நாட்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கீழ்க்கலை மாநாடும் 4-ம் நாள் திருவாதிரைக் காட்சியும் 5 முதல் 7 நாட்கள் இளமையாக்கினார் கோயிலில் சைவர் மாநாடும் சிறப்பாக நடைபெற்றன. விவரம் முன்னரே வெளியிடப்பட்டது.

2. கோவை :—ஜனவரி 4 முதல் 8 வரை, அய்யப்பன் பூசை நடைபெற்றது. பல பெரியார்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

3. கோவை :—21, 22, கம்பர் திருவிழா, தொடக்கப் பேச்சுக்கள், கவியரங்கம், பட்டி மண்டபம் சொற்பொழிவு விழா இவைகள் நான்கும் நடைபெற்றன.

4. மலேயா :—தமிழ் விழா முதன் முறையாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து இரண்டு பெரும் தமிழறிஞர்கள் அதில் கலந்து கொண்டார்கள்.

5. சென்னை :—சைவ சித்தாந்த மகா சமாசச் செயற்குழு 22-1-56-ல் கூடிச் சில தீர்மானங்களைச் செய்திருக்கின்றது.

திருப்போரூர் :—ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் மடாலய இளவரசுப் பட்டத்திற்கு, மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகளின் பூர்வாஸ்ரம இளைய புதல்வராகிய வித்வான் ஸ்ரீ சிவப்பிரகாச ஐயர் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். 26-1-56 வியாழக்கிழமை திருப்போரூரில் நிகழ்ந்த பட்டம் அளிப்பு விழாவில் சமாஜச் சார்பில் சைவப் பெரியார்கள் ச. சச்சிதானந்தம் பிள்ளை, ம. பால சுப்பிரமணிய முதலியார், ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், தி. கி. நாராயணசாமி நாயுடு (சமாஜச் செயலாளர்) முதலிய பலர் கலந்து கொண்டனர். திருப்போரூரில் தமிழ்க் கல்லூரி ஒன்று தொடங்குதல் வேண்டும் என மயிலம் அடிகளார் கூறியது, அனைவராலும் மன மகிழ்ச்சியுடன் வரவேற்கப் பட்டது. விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது.

மிகுதியும் சேர வேண்டுகின்றோம். உறுப்பினர்களுக்குச் சித்தாந்தம் இதழ் திங்கள்தோறும் அனுப்பப்பெறும்.

2. சமாஜத்தோடு, தமிழ்நாட்டிலுள்ள சமய சபைகள் பலவற்றையும் இணைப்புக் கட்டணம் ரூபாய் மூன்று (3-0-0) செலுத்தி, இணைத்துக் கொள்ளுமாறு சமயப் பற்றுடைய அன்பர்களை யெல்லாம் சமாஜம் வேண்டிக் கொள்ளுகின்றது. இணைத்துக் கொள்ளும் சமய அமைப்புகளின் நிகழ்ச்சிச் செய்திச் சுருக்கங்கள் அவ்வப்போது சித்தாந்தம் இதழில் வெளிவரும்.

—

நடப்பவை

1. **ம. பா. மணி விழா:**—அடுத்த 7—3—56-ல் சைவப் பெரியார் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களின் 60 ஆண்டு நிறைவு நடைபெறுகின்றது. அன்னார் சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்குச் செய்துள்ள திருத்தொண்டு கூறற்பாலதன்று. 1921 முதல் கொண்டு, செயலாளர், சொற்பொழிவாளர், ஆசிரியர், பதிப்பாசிரியர், சமயப்பரப்பர் முதலிய பல துறைகளிலும் அருந் தொண்டு புரிந்திருக்கின்றார். அன்னார் ஆண்டு நிறைவின்போது சைவ மக்கள் எல்லாரும் வணக்கம் கலந்த நன்றி காட்டி அக் கொண்டாட்டத்தில் ஈடுபடுவது கடமை. மேலும் கணக்கற்ற சைவ வைணவ சபைகளிலும் தமிழ்நாடு ஈழ நாடு இவைகளில் சுற்றுப் பயணஞ்செய்து தமிழுக்கும் சைவத்திற்கும் வழிபாடு செய்து இருக்கிறார். இந்தப் பெரும் திருவிழாவை முன்னிட்டு மார்ச்சுத் திங்கள் சித்தாந்தத்தை அவர்களது சிறப்பு மலராக வெளியிட விரும்புகின்றோம். அன்பர்கள் அனைவரும் தங்கள் கையுறைகளாகக் கட்டுரைகளை எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். பிப்ரவரி 20-ந் தேதிக்குள் சேருமாறு, (சித்தாந்த ஆசிரியர் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், 4/89, திருச்சிப் பாதை, கோயம்புத்தூர் அவர்கட்கு) அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. **மாசி மகத் திருநாள்:**—கும்பகோணத்தில் மகாமகம் இந்த ஆண்டு நடைபெறும். பெருங் கூட்டமாக

மக்கள் செல்லுவார்கள். அப்போது சித்தாந்தச் செல்வர்களும் அதில் ஈடுபடலாம். மேலும் திருப்பேரூரில் மகத்தை ஒட்டிக் குருபூசை நடைபெறும். அப்போது சாந்தலிங்கர் கல்லூரி ஆண்டு விழாவும், கவியரங்கம், பட்டி மண்டபம் தமிழ்ச் சைவ நாடகங்களும் சொற்பொழிவுகளும் நடைபெறும். அன்பர்கள் ஈடுபடுவார்களாக.

3. 27—1—56 தைப்பூசம் வெள்ளிக்கிழமையன்று, சமாஜச் செயற்குழு உறுப்பினர் ம. சி. சம்பந்த முதலியார் அவர்கள் இல்லத்தில் (12, தாச்சி அருணாசல முதலியார் தெரு, மயிலாப்பூர்) திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்களால் "உண்மை விளக்கம்" பாடமாகத் தொடங்கப் பெற்றது. அது வாரந்தோறும் திங்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி

திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் எழுதிய உரையும், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் எழுதிய அணிந்துரையும் கொண்டது. சமாஜப் பொன்விழா வெளியீடுகளுள் ஒன்றாகப் பதிப்பிக்கப்பெற்றது. 176 பக்கங் கொண்டது. விலை ரூபா ஒன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்பது. வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

கிடைக்கும் இடங்கள் :

1. ரா. சண்முகசுந்தரம் செட்டியார்,
"திருவதிகை" 167, பெரிய கூடல்,
ஷெணாய்நகர், சென்னை-30
2. தி. கி. நாராயணசாமி நாயுடு,
10, மாண்டீத் ரோட், எழும்பூர், சென்னை-8
3. சே. இரத்தினசாமி செட்டியார்,
ஸ்ரீ நடராஜா ஜுவெல்லரி ஹால்,
P. Box No. 14, சிதம்பரம்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi Edited by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14.